©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 22] சென்னை, புதன்கிழமை, மே 31, 2017
வைகாசி 17, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 42, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, 16 மார்ச் 2017, பங்குனி 3, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2048.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை புது தில்லி, 27–10–2016.**

**S.O. 3341 (E).**— 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மத்திய அரசு, 2016 ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்ட சில உணவுப் பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையில் திருத்தம் செய்வதற்கு பின்வரும் ஆணையை இதனால் பிறப்பிக்கிறது. அவையாவன:

1. இந்த ஆணை, 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் மீதான உரிம தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணை என்று அழைக்கப்படும்.

   (2) இந்த ஆணை 29–10–2016 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்ட சில உணவுப்பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த துணைப்பகுதி (2) இல், (ii) வது இனத்திற்குப் பதிலாக பின்வரும் இனம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

"28–04–2017 ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு சர்க்கரை".

[கோப்பு எண். S-10/5/2016ECR&E]

P.V. **ராம சாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் (உணவு மற்றும் பொது விநியோகத் துறை), ஆணை புது தில்லி, 28–10–2016.**

**S.O. 3348 (E).**— 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவு மற்றும் 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் 5 ஆம் பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, சர்க்கரை வணிகர் இருப்பினைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 30 நாட்களுக்கு மேற்பட்ட கால அளவிற்கு எந்தவொரு இருப்பினையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்ட அளவுகளுக்கு மிகையாக சர்க்கரை இருப்பினை வைத்திருக்கக்கூடாது என்றும் இதனால் உத்தரவிடுகிறது.

(i) கொல்கத்தா மற்றும் அதன் விரிவாக்கப்பட்ட பகுதி:

மேற்கு வங்க மாநிலத்திற்கு வெளியிலிருந்து சர்க்கரையை கொண்டு வரும் வணிகர்கள் – 10,000 குவிண்டால்கள்:

(ii) மற்றப் பகுதிகளில் – 5000 குவிண்டால்கள்; ஆனால், இந்த ஆணையிலுள்ள எவையும் பின்வருவோர் சர்க்கரையை வைத்திருப்பதற்கு அல்லது இருப்பில் வைத்திருப்பதற்கு பொருந்தாது.

(i) அரசுக் கணக்கில்; அல்லது

(ii) பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக்கடைகள் வாயிலாக விநியோகிப்பதற்கு இருப்பில் வைப்பதற்கு மாநில அரசால் நியமனம் செய்யப்பட்ட வணிகர்களால் அல்லது மாநில அரசால் அனுமதியளிக்கப்பட்ட அதிகாரியால்;

(iii) இந்திய உணவுக் கழகத்தால்.

மேலும், 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் 15 ஆம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசானது, மாநில அரசுகளுக்கும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி நிருவாகங்களுக்கும் இந்த ஆணையை செயல்படுத்துவதற்கு அனுமதியளிக்கிறது.

**விளக்கம்.**— இந்த அறிவிக்கையின் செயல் நோக்கத்திற்காக,–

(i) "கொல்கத்தா மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதி" என்பது மேற்கு வங்க அரசின் அறிவிக்கையின் (எண். 7752/FS/F.5/14R92/61, நாள்: 16–12–1964) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதி என பொருள்படும்.

(ii) இருப்பு வைக்கும் கால அளவைக் கணக்கிடும் போது வணிகரால் யாதொரு இருப்பு பெறப்பட்ட நாளும் சேர்க்கப்படும்.

(iii) தொழிற்சாலை வளாகங்களிலிருந்து அனுப்பப்பட்டு நுகர்வோரைச் சென்றடையும் வரையிலான சர்க்கரை வணிக அலைவரிசையில் சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களும் "வணிகர்" என்பதில் அடங்குவர்.

2. இந்த ஆணை 29–10–2016 ஆம் நாளன்று முதல் செயலுக்கு வருவதுடன் 28–4–2017 ஆம் நாள் வரையில் செயலில் இருக்கும்.

[கோப்பு எண். 1(6)/2016-SP-I.]

G.S. **சாஹூ,**
*இயக்குநர் (சர்க்கரைக் கொள்கை)*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 43, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (C2)த் துறை, 16 மார்ச் 2017.]*

1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 ஆம் பிரிவு மற்றும் சுரங்கங்கள் மற்றும் எரிபொருள் அமைச்சகத்தின் 13–11–1962 ஆம் நாளிட்ட SO 3524 ஆம் எண் ஆணை ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணையில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன ஆணையில்.–

(1) பகுதி 2–ல் உள்ள துணைப்பகுதி (f) க்கு பதிலாக பின்வரும் துணைப்பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(f) 'ஆணையர்' என்பது நுகர்பொருள் வழங்கல் ஆணையர் சென்னை என்று பொருள்படும்."

(2) 18 ஆம் பகுதியில்

(i) துணைப்பகுதிகள் (1) மற்றும் (2)–இல் உள்ள "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ii) துணைப்பகுதி (3)–இல் ''மாவட்ட ஆட்சியர்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர் நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) 19 ஆம் பகுதியின் (1) துணைப்பகுதியில் "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர் "நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(4) 20 ஆம் பகுதியின் (2) துணைப்பகுதியில் "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(5) 21 ஆம் பகுதியில் "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(6) 22 ஆம் பகுதியில் ''நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(7) 23 ஆம் பகுதியில்

(i) இல் உள்ள ஓரத்தலைப்பிற்கு பதிலாக கீழ்க்காணும் ஓரத்தலைப்பு அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

"பிணை வைப்புத்தொகையைப் பறிமுதல் செய்தல் அல்லது தண்டத் தொகை விதித்தல் அல்லது தற்காலிகமாக அல்லது முற்றிலுமாக உரிமத்தை இரத்து செய்தல்":

(ii) (1) ஆம் துணைப்பகுதிக்குப் பதிலாக பின்வரும் துணைப்பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்:–.

''(1) (a) 27 ஆம் பகுதியின் விதித்துறைகளுக்குப் பாதகமில்லாமல், ஏதேனும் வணிகர் உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழ் அல்லது சட்டப்படியான ஆணையின் ஏதேனும் நிபந்தனைகளை மீறியுள்ளார் என்று உரிமம் வழங்கும் அதிகாரி, மாவட்ட வருவாய் அலுவலர், நுகர்பொருள் வழங்கல் துணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர் அல்லது நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர் அல்லது நுகர்பொருள் வழங்கல் ஆணையர் நம்புவதற்கு காரணம் இருந்து, பிணை வைப்புத்தொகையை பறிமுதல் செய்தல் அல்லது தண்டத் தொகை விதித்தல் அல்லது தற்காலிகமாக அல்லது முற்றிலுமாக உரிமத்தை இரத்து செய்தல் அவசியம் என்று அவர் கருதினால், அவர், தொடர்புடைய வணிகர் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராக, தன்னுடைய தரப்பினை, எழுத்து மூலமாகத் தெரிவிப்பதற்கு வணிகருக்கு ஒரு நியாயமான வாய்ப்பினை அளித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வணிகர் செய்த குற்றத்தின் தன்மைக்கேற்ப அக்குற்றத்திற்காக, ஆணை ஒன்றின் மூலம் வணிகர் செலுத்திய

முழு பிணைய வைப்புத்தொகையை அல்லது அதன் ஒரு பகுதியை பறிமுதல் செய்யலாம் அல்லது வணிகருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை தற்காலிகமாக அல்லது முற்றிலுமாக இரத்து செய்யலாம். எழுத்து மூலமான அத்தகைய ஆணையின் நகல், தொடர்புடைய வணிகருக்கு அனுப்பி வைக்கப்படும். அத்தகைய ஆணையைப் பிறப்பித்த உடனேயே, அத்தகைய தண்டனை, வணிகரின் உரிமத்திலும், உரிமம் வழங்கும் அதிகாரிகள் வைத்து வருகிற உரிமப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்படும்.

**அட்டவணை**

| *தொடர் எண்* (1) | *முறைகேட்டின் தன்மை* (2) | *தண்டனை நடவடிக்கை* (3) | | |
|---|---|---|---|---|
| | | *முதலாவது குற்றம்* | *இரண்டாவது குற்றம்* | *மூன்றாவது குற்றம்* |
| 1 | உயர்ரக மண்ணெண்ணெய் விற்பனை மற்றும் விநியோகம் குறித்த அரசின் விதிமுறைகள், இயக்கம் சார்ந்த வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும் உத்தரவுகளைப் பின்பற்றாமை. | மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளரால் செலுத்தப்பட்ட பிணைய வைப்புத் தொகையிலிருந்து ரூ. 5,000/– பறிமுதல் செய்தல் மற்றும் 15 நாட்களுக்கு உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்தல் | மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளரால் செலுத்தப்பட்ட பிணைய வைப்புத் தொகை முழுவதையும் பறிமுதல் செய்தல் மற்றும் 30 நாட்களுக்கு உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்தல் | மொத்த விற்பனை உரிமத்தை முற்றிலுமாக இரத்து செய்தல் |
| 2 | அதிக விலை வசூலித்தல் | மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளரால் செலுத்தப்பட்ட பிணைய வைப்புத் தொகையிலிருந்து ரூ. 5,000/– பறிமுதல் செய்தல் மற்றும் 15 நாட்களுக்கு உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்தல் | மண்ணெண்ணெய் மொத்த விற்பனையாளரால் செலுத்தப்பட்ட பிணைய வைப்புத் தொகை முழுவதையும் பறிமுதல் செய்தல் மற்றும் 30 நாட்களுக்கு உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்தல் | மொத்த விற்பனை உரிமத்தை முற்றிலுமாக இரத்து செய்தல் |
| 3 | (a) பொருட்களை அளவில் குறைத்து வழங்குதல் (எடை மற்றும் அளவைகளின் முத்திரைகள் சீர்குலையாமல் உள்ள நேர்வில்) | எண்ணெய் நிறுவனம் மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அதிகாரிகளின் எடை மற்றும் அளவைகள் துறையினால் அளவுகள் மீண்டும் திருத்தப்படுகிற வரையில் விற்பனையும் வழங்கலும் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். | | |
| | (b) பொருட்களை அளவில் குறைத்து வழங்குதல் (எடை மற்றும் அளவைகளின் முத்திரைகள் சீர்குலைக்கப்பட்டுள்ள நேர்வில்) | மொத்த விற்பனை உரிமத்தை முற்றிலுமாக இரத்து செய்தல் (வழங்கல் குறைவாகவோ அல்லது சரியாகவோ அல்லது மிகையாகவோ இருப்பதைக் கருத்திற் கொள்ளாமல்) | –– | –– |
| | (c) மொத்தத்தை அளவிடுகிற சாதனத்தின் மேலுள்ள முத்திரைகள் சீர்குலைக்கப்பட்டிருப்பது கண்டறியப்படுதல் (எடைகள் மற்றும் அளவைகளின் முத்திரைகள் சீர்குலைக்கப்படுவதற்கு பொருத்தக்–கூடிய தண்டனை நடவடிக்கை) | மொத்த விற்பனை உரிமத்தை முற்றிலுமாக இரத்து செய்தல் (வழங்கல் குறைவாகவோ அல்லது சரியாகவோ அல்லது மிகையாகவோ இருப்பதைக் கருத்திற் கொள்ளாமல்) | –– | –– |

| தொடர் எண் (1) | முறைகேட்டின் தன்மை (2) | தண்டனை நடவடிக்கை (3) | | |
|---|---|---|---|---|
| | | முதலாவது குற்றம் | இரண்டாவது குற்றம் | மூன்றாவது குற்றம் |
| 4 | வணிகர் மண்ணெண்ணெய் வழங்குகிற போது, இடைவழியில் பொருட்களை எண்ணெய் முனையத்திலிருந்து மொத்த விற்பனை செய்யும் இடத்திற்கும், நியாயவிலைக் கடைகளுக்கும் திருப்பி விடுவது உட்பட, உயர்ரக மண்ணெண்ணெய் அல்லது இந்த தயாரிப்பு பொருட்களுக்கு ஒரு மாற்றுப் பொருளாகப் பயன்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் தயாரிப்பை அனுமதியற்ற வகையில் கொள்முதல் செய்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது மாற்றுதல். | மொத்த விற்பனை உரிமத்தை முற்றிலுமாக இரத்து செய்தல். | -- | -- |
| 5 | நேரடிச் சரிபார்ப்பின் போது உள்ள இருப்பிற்கும், பதிவேட்டில் உள்ள இருப்பிற்கும் இடையே அனுமதிக்கத்தக்க அளவிற்கும் அதிகமான இருப்பு வேறுபாடு | மொத்த விற்பனை உரிமத்தை முற்றிலுமாக இரத்து செய்தல். | -- | -- |

(b) மொத்த விற்பனை வணிகர் அல்லது சில்லறை விற்பனை வணிகர் மனுவை அளித்ததன் பேரில், அத்தகையை ஆணைக்கு மேல்முறையீட்டு அதிகாரியால் தடையாணை விதிக்கப்பட்டிருந்தாலன்றி, மற்றபடி, ஆணைகள் வரப்பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் உரிமம் பெற்றவர், அபராதத் தொகையைச் செலுத்துவார் அல்லது உரிமம் வழங்கும் அதிகாரி அல்லது மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது நுகர்பொருள் வழங்கல் துணை ஆணையர் அல்லது நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர் அல்லது நுகர்பொருள் வழங்கல் ஆணையர் உத்தரவிட்டவாறு பிணைய வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும். வணிகர், மேலே குறிப்பிட்ட கால அளவிற்குள், தண்டத்தொகையைச் செலுத்த தவறினால், அத்தகைய தொகை, வணிகர் செலுத்திய பிணைய வைப்புத் தொகையில் சரிகட்டப்படும். மற்றும் பிணைய வைப்புத் தொகை அபராதத்தை விட குறைவாக இருக்குமாயின், உரிமம் தானாகவே செல்திறன் அற்றதாகி விடும்.''

**(8)** 24 ஆம் பகுதியில்

(i) துணைப்பகுதி **(1)**இல் உள்ள ''நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இணை ஆணையர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ii) துணைப்பகுதி **(2)**இல் ''நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர், நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**(9)** 25 ஆம் பகுதியில் ''ஆணையர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''நுகர்பொருள் வழங்கல் ஆணையர் அல்லது நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**(10)** 27 ஆம் பகுதியில், **(1)**ஆம் துணைப்பகுதியில்

(a) ''அவரவர் அதிகாரவரம்பிற்குள்'' என்ற சொற்றொடருக்குப் பின்னர், ''அத்தகைய மேல்முறையீட்டு மனு பெறப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள்ளாக அத்தகைய மேல்முறையீட்டு மனு ஒருவகை செய்யப்பட வேண்டும்'' என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்;

(b) அட்டவணை நெடும்பத்தியில்

(i) நெடும்பத்தி (i) இல் உள்ள "(e) நுகர்பொருள் வழங்கல் துணை ஆணையர் (மாநகர்) மற்றும் மாவட்ட ஆட்சியர்கள்" என்ற பதிவிற்கு எதிரே வருகிற (ii) ஆம் நெடும்பத்தியில் உள்ள" "நுகர்பொருள் வழங்கல் ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "அல்லது நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ii) நெடும்பத்தி (i) இல் உள்ள (f) பதிவில் உள்ள "நுகர்பொருள் வழங்கல் இணை ஆணையர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "அல்லது நுகர்பொருள் வழங்கல் கூடுதல் ஆணையர்" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.